வரும் அக்.30-அன்று பசும்பொன் வருகை தரும்

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு மாபெரும் வரவேற்பு!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக். 21-

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும் பொன் தா.கிருட்டிணன் ஆண்டு அரங்க த்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்ன வன் முன்னிலையில் நடை பெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங் கைமாறன் வரவேற்று பேசி னார்.

இந்த கூட்டத்தில் கழக தலைவர் தளபதி அவர்க ளால் அறிவிக்கப்பட்ட மாவட்ட மறுசீரமைப்பு குழு பார்வையாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டி யன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இளையராஜா ஆகியோர் கலந்து கொண்டு தொகுதி மறு சீரமைப்பு குறித்து பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சர் மாவட்டக் கழக செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது:-

நடைபெற்று முடிவ டைந்த சட்டமன்றத் தேர்த லில் ஏற்பட்ட தோல்விக் கான காரணம் குறித்து ஆராய கழக தலைவர் தள பதி அவர்களால் தொகுதி மறுசீரமைப்பு குழு அமைக் கப்பட்டுள்ளது. நமது தொகுதி பார்வையாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டி யன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் இளையராஜா ஆகியோர் கலந்துகொண்டு கடந்த இரண்டு மாதங்களாக தொகுதி மறு சீரமைப்பு குறித்து ஆய்வு நடத்தினார் கள். இதில் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகளை நேரில் சந்தித்து இந்த ஆய்வு கூட்டத்தினை 100% வெற்றிகரமாக முடித்து உள் ளார்கள்.

இதற்கு ஒத்துழைப்பு நல் கிய மாவட்ட கழக நிர்வா கிகள், ஒன்றிய, நகர ,பேருர் கழக நிர்வாகிகள் ஆகியோ ருக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தேர்தலில் நமது மாவட்டத் திற்கு ஒதுக்கப்பட்ட நான்கு ஊராட்சிகளில் கழகத்தினர் அனைவரும் அயராது பணி



யாற்றி வாக்குச் சாவடிக ளில் கழக வேட்பாளருக்கு கூடுதலாக வாக்குகளை பெற்று தந்தீர்கள். அதற்கு உங்களுக்கு மாவட்ட கழ கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் நாம் பணியாற்ற வேண்டிய விதம் குறித்து நம்முடைய கழகத் தலைவர் தலைவர்த ளபதி அவர் கள் அறிவிப் பார்கள் . கழக தளபதி அவர்கள் அறிவிக்கும் எத்த கைய கட்டளையும் நிறை வேற்றும் முதல் மாவட்ட மாக சிவகங்கை மாவட்டம் தொடர்ந்து செயல்படும் என்ற உறுதியினை தெரிவித் துக் கொள்கிறேன்.

நாம் நம்முடைய எதிரி களை வீழ்த்துவதற்கு ஒற்று மையுடன் ஒன்றுபட்டு போராட வேண்டும் . கழ கத்தினர் எதற்கும் என்றும் சளைத்தவர்கள் அல்ல .நாம் ஒன்று பட்டு போராடினால் எதிரணியினரை சுலபமாக வீழ்த்த முடியும் .அந்த வகையில் நாம் பணியாற்ற வேண்டும் என்று கேட் டுக்கொள்கிறேன்.

24ம்தேதி திருப்பத்தூரில் மாமன்னர் மருத்துவர்கள் குருபூஜை 30ஆம் தேதி பசும் பொன் முத்து ராம லிங்கத் தேவர்குருபூஜை ஆகிய நிகழ்ச்சிகள் நடை பெற உள்ளது. பசும் பொன் குருபூஜை நிகழ்ச்சிக் கு கழ கத் தலைவர் தளபதி அவர் கள் வருகைதரு உள்ளார் கள். அவருக்கு மாவட்ட எல்கையான திருப்புவனத் தில் சிறப்பான வரவேற்பு தரப்பட உள்ளது. இதில் மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.பெரி யகருப்பன் சிறப்புரை யாற்றினார்.

இந்த கூட்டத்தில் முன் னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார் புதுக் கோட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் க.சண்முகம்,, முன் னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப் பன் கென்னடி, மாவட்ட இளைஞரணி அமைப்பா ளர் நாகனி செந்தில் குமார் ,மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் நிர்வாகி கள் மார்க்ரெட் கமலா, பாக்கியலட்சுமி விஜய குமார், மாவட்ட மாணவ ரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், துணை அமைப் பாளர் ராஜ அமுதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப் பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட செய்தி தொடர் பாளர் அ.அயூப்கான்,

மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எ ஸ் . ஏ . வ ல் ல ப ா ய் , மாவட்ட, ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது, அமைப்பா ளர் சிங்கமுத்து, தகவல் தொழில்நுட்ப அணி காளி முத்து, பொதுக்குழு உறுப் பினர்கள்த.உதயகுமார், ஜெ.மதார்சேட், ஏ.இ.ஆர். சுரேஸ்,தெய்வானை இள மாறன்,வர்த்தக அணி சேவி யர், நகர் கழக செயலாளர் கள் பெரி.பாலா,க.பொன் னுச்சாமி,

மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசெ கரன், ஒன்றிய கழக செய லாளர்கள் நாகனி ரவி, பூபால சிங்கம்,லெ.மு. ரவிச் சந்திரன், எம். ஜெயராமன், திருமலை முத்துராம லிங்கம், பெ.மந்தக்காளை, துரை.ராஜா மணி, அ. முத் துச்சாமி, கா.வெங்கட் ராமன் , அறு. செல்வராஜன் வே . த மி ழ் ம ா ற ன் , குன்னக்குடி சுப்ரமணியன், ந ா . ந ெ ட ு ஞ் ச ெ ழி ய ன் பூமணி, கே. பாலசுப்பிர மணியன், விராமதி மாணிக் கம், ஆர்.எம் கென்னடி, யோக. கிருஷ்ணகுமார், வே . ஆ ர ோ க் கி ய ச ா மி , ம ா . அ ண் ண ா து ர ை , பி. செல்வராஜ் ,

பேரூர் கழகச் செயலா ளர்கள் கதிர்வேல், அசோக், ராசு ,நிர்வாகிகள் ஜெயகாந் தன், அரிஹரன், அண்ணா மலை, தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், சுப. அன்பரசன், சுப. தமிழரசன், சேகர், அச்சங்குளம் முரு கன், திருமதி லட்சுமி கணேஷ், கலா காசிநாதன், இன்ஜினியர் மைக்கேல், சொ.கண்ணன், ஒட்டுனர் ரமேஷ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என்.ரவி, பொருளாளர் அன்புச் செழியன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வே.கருணாகரன், கே.எம். பொற்கோ, ஆர். சேதுபதி ராஜா, கார்த்தி, எஸ்.எம். மதிவாணன் பரணிகிட்டு, சுப.ஜெயக்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் கள் சிவபுரி சேகர், எஸ்.முத்துக் குமார், பிள்ளையார்பட்டி சதிஷ், வீரகாளை, மாணவ ரணி கார்த்தி, பாஸ்கரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன் நன்றி கூறி னார்.

உச்சநீதிமன்றத்தைக் கைப்பற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி!

மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் குற்றச்சாட்டு!

புதுடில்லி, அக். 21 -

ஒன்றிய அரசு நாட்டின் பல்வேறு அரசியலமைப்பு மற்றும் சுயாதீன நிறுவனங் களைக் கைப்பற்ற முயன்று வரு வதாக மூத்த வழக்கு ரைஞரும், நாடாளு மன்ற உறுப்பினருமான கபில் சிபல் குற்றம் சாட்டி யுள்ளார்.

டில்லியில் செய்தியாளர் களைச் சந்தித்து அவர் பேசி யதாவது: -

2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டின் முக்கிய நிறு வனங்களைக் கைப்பற்று



வதையே ஒன்றிய அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. ஊடகங் கள், பல்கலைக்கழகங்கள், ஆளுநர் பதவிகள் எனப் பல அமைப்புகளையும் அவர் கள் தங்கள் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவந்து விட்டனர்.

ஆனால், இதுவரை அவர் களால் கைப்பற்ற முடியாத ஒரே ஒரு நிறுவனம் இந்திய உச்ச நீதிமன்றம் மட்டுமே.

உச்சநீதிமன்றத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஒன்றிய அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. இருப்பினும், உச்ச நீதிமன்றம் மக்கள் உரி மைகளையும் ஜனநாயகத் தையும் பாதுகாக்கும் என்ப தில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.

மக்களின் அமைதியான போராட்ட உரிமைகளை ஒடுக்குவதும், ஜனநாயக ரீதியிலான குரல்களை நசுக் குவதும் அரசியலமைப் புக்கு எதிரானது. தேர்தல் ஆணையம் மற்றும் வாக்கா ளர் பட்டியல்களில் நடை பெற்றுள்ள குளறுபடிகள் குறித்து உச்ச நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுக் கும் என்று நம்புகிறேன் என அவர் கூறினார்.

மின்கொள்முதலில் கலெக்சன் குமாரின் பலஆயிரம் கோடி ரூபாய் வசூல்

பார்ட்டி ஃபண்டா அல்லது பர்சனல் ஃபண்டா சி.எம்.சார்?

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, அக்.21-

சட்டப்பேரவை முன் னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதி வில் கூறியிருப்பதாவது:-

பா.ஜ.க.வின் கங்காணி யாக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் கலெக்சன் குமார் என்ற சங்கி நிர்மல் குமார் தமிழகத்தின் மின் நிறுவுத் திறனில் 65 சதவீதம் உற்பத்தியை 35 சதவீதமாக குறைத்து செயற்கையான மின் தட்டுப்பாட்டை உரு வாக்கி தினம் சுமார் 100 கோடி ரூபாய்க்கு மேல் தனி யாரிடம் மின்சாரம் வாங்கு வது, அறிவிப்பு இல்லா மின் கட்டண உயர்வு, ஸ்மார்ட் மீட்டர் பொருத்தி செல் போன் ரீசார்ஜ் செய்வது போல் மின் கட்டணமும் வசூலிக்க ஏற்பாடு செய்து தனியாருக்கு கொடுக்க பல ஆயிரம் கோடி ரூபாய் பெற்றிருப்பதாக வரும் செய்தி பார்ட்டி ஃபண்டா? அல்லது பர்சனல் ஃபண்டா CMsir?

காற்றாலை, சோலார் மின் உற்பத்தி மூலம் பல



ஆயிரம் MW மின் உற்பத்தி செய்துள்ள தனியாருக்கு ஒப்புதல் வழங்க MW1க்கு ரூபாய் 15 லட்சம் வீதம் சுமார் 1500 கோடி ரூபாய் நிர்மல் குமார் வாங்கியிருப் பதாக உலாவரும் செய்தி களை இல்லை என்று மறுக்க முடியுமா CMsir?

உங்கள் சொத்துக்களை சோதனையிட வந்த வருமா னவரித்துறை அதிகாரி அருண்ராஜ் ஐ கட்சியில் சேர்த்து அமைச்சரவையி லும் இடம் கொடுத்து செவி லியர் கல்லூரிகள் ஒவ் வொன்றிற்கும் அங்கீகாரம் வழங்க ரூபாய் 75 லட்சம் வீதம் பணம் வசூலிப்பது உங்களுக்கு தெரியுமா CMsir?

கோட்டையில் யாருக்கு அதிகாரம் என்பதில் "ரெட் டிகேங்" "தலைமைச் செய லாளர்",அமைச்சர் புஸ்லி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோரிடையே நடக்கும் போட்டியை பார்த்து மற்ற அமைச்சர்கள் யார் கட்டுப் பாட்டிலும் இல்லாமல் "விளைந்த காட்டுக்குள் புகுந்த யானை போல்" சகட்டுமேனிக்கு மாமுல் வசூலித்து நாட்டை சூறை யாடி வருவது உங்கள் கவ னத்திற்கு வரவில்லையா? CMsir?

இதே போல் தான் தமி ழக அரசு அதிகாரிகள் இல் லாமல் "ஆந்திரா ரெட்டி கேங்" மற்றும் "கலெக்சன் கேங்" ஆகியோருடன் ஆந் திரா சென்று ஆந்திர முதல் வர் மற்றும் சாராய ஆலை அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதின் மர் மம் என்ன? "தமிழக டாஸ் மார்க்" நிறுவனத்தை அவர்களுக்கு விலைக்கு கொடுக்க முடிவு செய்து விட்டதாக வரும் செய்தி கள் உண்மையா CMsir?

இவ்வாறு அவர் கூறி யுள்ளார்.

வங்கக்கடலில் வருகிற 23ஆம் தேதி

குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகிறது!

இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக்.21-

வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கை யில், தாய்லாந்து வளை குடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, நாளை காலை வடக்கு அந்தமான் கடல் பகுதிக்குள் நகரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வளிமண்டல சுழற்சியின் தாக்கத்தால், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு வங்கக்கடலில், வரும் 23ஆம் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெற வாய்ப்புள்ள தாகவும் கூறப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

20 ஆண்டுகளாக தொடர்ந்து வழங்கல்!

திருப்பத்தூரில் 4500 தொழிலாளர்களுக்கு சீருடை!

முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, அக். 21 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி உட்பட்ட திருப் பத்தூர்,அரளிக்கோட்டை, பிள்ளையார்பட்டி, கல் லல், சிங்கம்புணரி, நெற் குப்பை,ஏரியூர், பிரான் மலை, பிள்ளையார் பட்டி உட்பட 20க்கும் மேற் பட்ட ஊர்களில் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் முன்னாள் அமைச்சர் சிவ கங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரி யகருப்பன் 'கருப்பாயி கருத்தான் அறக்கட்டளை' சார்பில் தனது சொந்த செலவில் சீருடைகளை வழங்கி வருகிறார் .

இந்த ஆண்டு நேற்று முன் தினம்20வது ஆண் டாக ஆயுதபூஜையினை முன்னிட்டு திருப்பத்தூர் நகரில் பேருந்துநிலையம், நான்கு ரோடு சந்திப்பு, பேரறிஞர் அண்ணா திடல், கல்வெட்டுமேடு, தி. புதுப்பட்டி,தென்மா உட்பட பட்டு, 10க்கும் மேற்பட்ட இடங்களில் ஆட்டோ, வேன், கார், டெம்போடிராவலர் ஓட்டு னர்களுக்கு சீருடைகளை வழங்கி ஆயுதபூஜை வாழ்த் துக்கூறி சிறப்புரை யாற்றி னார்.

திருப்பத்தூர் சட்ட மன்ற தொகுதியில் 4500க் கும் மேற்பட்ட தொழிலா ளர்களுக்கு அந்தந்த பகுதி ஒன்றிய, பேரூர் கழக செய லாளர்கள், நிர்வாகி கள் வழங்கினார்கள். கொட் டும் மழையிலும் திருப்பத்தூரில் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் சென்று சீருடை களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ் குமார் பேருராட்சி மன்ற துணை தலைவர் கான் முக மது ,தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பா ளர் காளிமுத்து , நிர்வாகி கள் ராம.ரவி, ஷாஜகான், இ ள ை ஞ ர ண ி ப ஷ ி ர் , மனோகரன், பூக்கடை பாண்டியன், பிள்ளையா ர் பட்டி சதீஷ், ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துக்குமார் மனோக ரன், ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன், காரையூர் தமிழ்ச்செல்வன், ராம நாதன் உட்பட கழக நிர் வ ா கி கள் கலந்து கொண்டனர். ஆட்டோ சங்க நிர்வாகிகள் முருகன் ராஜேஷ், கார்த்தி, சங்கர் மற்றும் நிர்வாகிகள் கே.ஆர்.பெரியகருப்ப னுக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச.

தருமபுரி மண்டல மத்திய சங்க நிர்வாகிகள்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. தருமபுரி மண்டலத்தின் (பதிவு எண். 182/DRP. பேரவை இணைப்பு எண். 469) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் 14.10.2026 அன்று பேரவைச் செயலாளர்-V. குருநாதன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது. அதில் மத்திய சங்க நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

மத்திய சங்க நிர்வாகிகள் தலைவர்-T. வாசுதேவன் DR 6814 -கிருஷ்ணகிரி புறநகர். துணைத் தலைவர்கள்-) D. சரவணன் DR-5800 -தர்மபுரி நகர்.2) K. ராஜாமணி DR 6453 -தர்மபுரி நகர்.3) S. அசோகன் DR 6985 - அரூர்.4) K. சிவகுமார் DR 6229 - கிருஷ்ணகிரி நகர்.5) N. பார்த்திபன் DR 6919 - கிருஷ்ணகிரி நகர்.

பொதுச்செயலாளர்-T. யுவராஜ் CR 5824 - பாலக்கோடு.

துணைப்பொதுச்செயலாளர்கள் -1) G. முத்துசாமி CR 6021 - கிருஷ்ணகிரி நகர்

செயலாளர்கள். 2) A. செல்வம் CR 6822 - அரூர். 3) K. தேவன் CR 7744 - சேலம்.

4) V.வீரமணி DR 6547 ஒசூர் புறநகர். 5) G.ராஜேந்திரன் TR 5553 -பென்னாகரம்

செலாளர்கள் -1) P. மாது CR 6891- தர்மபுரி புறநகர். 2) S. செந்தில்குமார் DR 6697 -கிருஷ்ணகிரி புறநகர்.3) C. குபேந்திரன் DR 7443 - பாலக்கோடு. 4) J. ஜெயபிரகாஷ் DR 7143 தர்மபுரி நகர் 5) M. ராஜேந்திரன் DR 5723 - ஊத்தங்கரை.

பொருளாளர் - R.வெற்றிவேல் CR 7023 - பென்னாகரம். பிரச்சார செயலாளர்-N.P. முருகன் CR 6966 -தர்மபுரி புறநகர். அமைப்புச் செயலாளர் -M.பரமசிவம் CR 6639- கிருஷ்ணகிரி புறநகர்

செயற்குழு உறுப்பினர்கள்-1) B. பாலகிருஷ்ணன் CR 8110 ஒசூர் புறநகர். 2) G. ராமன் CR 7190 -ஒசூர் புறநகர்.3) S. சீனிவாசன் CR 6315 - பாலக்கோடு.

4) G. மந்திரி CR 6596 - தர்மபுரி நகர். 5) K. பூபதி DR 7502 -தர்மபுரி நகர்.6) P. பாலாஜி CR 7406 -தர்மபுரி நகர். 7) S. மாதேஸ்வரன் CR 6356 - தர்மபுரி புறநகர். 8) M. அன்பழகன் CR 7216 - தர்மபுரி புறநகர். 9) S.M. முருகேசன் CR 7349 -தர்மபுரி புறநகர். 10) M. மாது DR 6760 - ஊத்தங்கரை. 11) R. கண்ணன் CR 6677 -திருப்பத்தூர் 12) L. ராஜேஷ் CR 6706-கிருஷ்ணகிரி நகர். 13)V.சின்னராஜ் DR 7059-கிருஷ்ண கிரி நகர். 14)S.மனோகர் TR 5167-கிருஷ்ணகிரி நகர். 15)N.வெங்கடேஷ் DR 7284-கிருஷ்ணகிரி புறநகர். 16)M.கோவிந்தசாமி DR7753-கிருஷ்ணகிரி புறநகர். 17)G.ஆரோக்கியராஜ் CR 7133-கிருஷ்ணகிரி நகர். 18)S.ரவி DR 8322 - தேன்கனி கோட்டை.

இடம் : கலைஞரகம்

நாள்: 17.10.2026.

மு.சண்முகம்

பொதுச்செயலாளர்,

தொ.மு.ச. பேரவை

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் !

வெற்றி பயணம் பஸ்சில் பயணிக்க பொதுமக்கள் பயம்!

அடிக்கடி பழுதாகி வழியில் நிற்பதால் பயணிகள் கடும் தவிப்பு!

தேனி, அக்.21-

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் அறி முகப்படுத்தப்பட்ட வெற்றி பயணம் பேருந்துகளில் பயணம் செய்வதற்கே பொதுமக்கள் பயப்படும் நிலை ஏற்பட் டுள்ளது. அடிக்கடி பஸ் பழு தாகி இடையில் நிற்பதால் குறிப்பிட்ட நேரத்திற்கு பய ணிகள் செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர்.

வழியில் நிற்கும் வெற்றி பயணம் பஸ்கள்:

தேனி மாவட்டத்தில் தேனி மதுரை, தேனி சென்னை, தேனி கோவை, போடி மதுரை, கம்பம் திண்டுக்கல் வழித்தடங்க ளில் இயக்கப்படும் வெற்றி பயணம் பேருந்துகள் தின மும் பழுதாகி வருகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ஆண்டிபட்டி அருகே வைகை அணை பிரி வில் வெற்றி பயணம் பஸ் பிரேக் பிடிக்காமல் நின்றது, பெரியகுளம் அருகே டயர் வெடித்து நின்றது, போடி மெட்டு பகுதியில் இன்ஜின் பழுதாகி 3 மணி நேரம் நடு ரோட்டில் நின்றது என தொடர் சம்பவங்கள் நடந் துள்ளன.

பயணிகள் தவிப்பு:

இதனால் வேலைக்கு செல்வோர், பள்ளி, கல்லூரி மாணவர்கள், மருத்துவம னைக்கு செல்வோர் குறிப் பிட்ட நேரத்திற்கு செல்ல முடியாமல் கடும் அவதிக்கு உள்ளாகின்றனர். நேற்று மதுரை சென்ற வெற்றி பய ணம் பஸ் உசிலம்பட்டி அருகே பழுதானதால் 50 க்கும் மேற்பட்ட பயணிகள் 2 மணி நேரம் வெயிலில் காத்து கிடந்தனர். மாற்று பஸ் வராததால் தனியார் வாகனங்களில் அதிக கட்ட ணம் கொடுத்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட் டது.

வெற்றி பயணம் என்ற பெயரில் பழைய பேருந்து களுக்கு வெறும் வண்ணம் மட்டும் பூசி இயக்குவதாக வும், முறையான பராம ரிப்பு இல்லாமல், தரமற்ற உதிரி பாகங்கள் பயன்படுத் துவதால் தான் அடிக்கடி பழுது ஏற்படுவதாக போக் குவரத்து தொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். டிரைவர்களுக்கு முறை யான பயிற்சி இல்லை, பஸ்சில் கூடுதல் பயணி களை ஏற்றுவதால் இன்ஜின் சூடாகி பழுதாகிறது என வும் கூறப்படுகிறது.

மைனாரிட்டி த வெக ஆட்சியில் விளம்பரத்திற் காக அவசர அவசரமாக வெற்றி பயணம் திட் டத்தை கொண்டு வந்து விட்டு, பாதுகாப்பை கவ னிக்கவில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டுகின்ற னர். பழைய அரசு பஸ்களை விட வெற்றி பயணம் பஸ் கள் மோசமாக உள்ளதாக வும், இலவசம் என்ற பெய ரில் உயிருடன் விளையாடு வதாகவும் சமூக வலைதளங் களில் விமர்சனம் எழுந் துள்ளது.

தேனி மாவட்டத்தில் இயக்கப்படும் வெற்றி பய ணம் பேருந்துகளை முறை யாக பராமரித்து, பழுதான பேருந்துகளை நிறுத்தி விட்டு புதிய பேருந்துகளை இயக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(19.10.2026)



1. கோவை மாவட்டம் சரவணம்பட்டியில் குடி போதையில் ஏற்பட்ட தகராறில் ஹோட்டல் ஊழி யர் அடித்துக் கொலை ...

2. கடலூர் மாவட்டம் பெரிய வடவாடி கிராமத்தில் முன்விரோதம் காரணமாக விறகு வெட்டும் கோடாரியால் விவசாயி வெட்டி கொலை ...

3. ஈரோடு அரசு மருத்துவமனை வளாகத்தில் பட்டப் பகலில் பரபரப்பு. முன்விரோதம் காரணமாக மாமனாரை சரமாரியாக கத் தியால் குத்திய மருமகன்.....

4. விழுப்புரம் அருகே சிந்தாமணி வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டி ருந்த ஆறு வயது பெண் குழந்தையை வாயைப் பொத்தி கடத்திச் செல்ல முயன்ற வட மாநில வாலிபர் சிக்கினார்...

5. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே காணாமல் போன 11 வயது சிறுமி 8 நாட்களுக்கு மேலாகியும் இதுவரை கிடைக்காததால் பதட்டம் ...

6. திருப்பெரும்புதூர் அருகே தனது பாட்டி வீட்டில் வசித்து வந்த எட்டு வயது சிறுமி மாயம். ஏற்கனவே செஞ்சி அருகே 11 வயது சிறுமி மாயமான நிலையில் மற்றுமொரு சம்பவம் .....

7. உதகை அருகே கொதுமுடி கிராமத்தில் கடந்த 15 நாட்களாகச் சுற்றித்திரிந்த



கரடியைக் கூண்டு வைத்து வனத்துறையினர் பிடித்தபோது, தாங்கள்தான் பிடித்ததுபோல் ரீல்ஸ் வீடியோ எடுத்த த.வெ.கவினர்.....

8. நாகையில் போதை பொருள் குறித்து செய்தி வெளியிட்ட தனியார் தொலைக்காட்சி நிருபருக்கு கொலை மிரட்டல் விடுத்த தவெக நகர செயலாளர் சிக்கினார்....

9. திருப்பூர் கிழக்கு மாவட்ட தவெக முக்கிய நிர்வாகி இணையவழி பரிமாற்றம் மூலம் ரூபாய் 200 கோடி மோசடி த.வெ.க. நிர்வாகி உட்பட, மூன்று போலீசில் சிக்கினர் ...

10. திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு பேருந்து ஓட்டுநர் மீது தாக்குதல் நடத்திய ஆட்டோ ஓட்டுனர், பேருந்துகளை சாலையில் நிறுத்தி பேருந்து டிரைவர்கள் போராட்டம்....



11.நாகை அருகே 135 கிலோ மெத்தபெட்ட மைன் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் சிந்தாமணி பிரதான சாலைப்பகுதியைச் சேர்ந்த தவெக நிர்வாகி பூபாலன் உள்ளிட்ட 4 பேருக்கு 15 நாள் நீதிமன்ற காவல். கைதான தவெக நிர்வாகி உள்ளிட்ட 4 பேரும் 15 நாள் நீதிமன்ற காவலில் நாகப்பட்டினம் சிறைச்சாலையில் அடைப்பு.

12.ஈரோடு மாவட்டம் பல்லகவுண்டம்பாளையத்தில் கடந்த 14ம் தேதி காணா மல் போன செவிலியர் உத்திரா சடலமாக மீட்பு